இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 29 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆவணி 22 – செவ்வாய்க்கிழமை 08 செப்டம்பர் 2026 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 29 : Thiruvalluvar Year - 2057 - Aavani 22 - Tuesday 08 September 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00


## கோயம்பேடு - நந்தம்பாக்கம் இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம்!



சென்னை, செப்.8-

சென்னையில் இரண்டாம் கட்டமாக 116.1 கி.மீ. தூரத்துக்கு மாதவரம் சிறுசேரி சிப்காட், கலங்கரை விளக்கம் பூந்தமல்லி பணிமனை, மாதவரம் சோழிங்க நல்லூர் ஆகிய மூன்று வழித்தடங்களில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இப்பணிகளை 2028ம் ஆண்டுக்குள் முடிக்க சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதில், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான 5வது வழித்தடத்தில் சுமார் 26 கி.மீ நீளமுள்ள கோயம்பேடு முதல் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையம் வரை கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளது. மேலும் 90 சதவீதத் தண்டவாளப் பணிகள் நிறைவடைந்துவிட்டன.

எஞ்சியுள்ள தண்டவாளப் பணிகளை அடுத்த பத்து நாட்களுக்குள் முடித்துவிடத் திட்டமிடப்பட்டு வருவதாகவும், கோயம்பேடு நந்தம்பாக்கம் இடையே, வரும் நவம்பர் மாதத்தில் சோதனை ஓட்டத்தை தொடங்க திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ஓ.பி.சி. மக்களின் உரிமையைக் காப்பாற்றிட

# குளறுபடியின்றி சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திடுக!

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!



**சென்னை, செப்.8-**

**“குளறுபடிகளுக்கு இடம் தராமல் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்! ஓ.பி.சி. மக்களின் உரிமையைக் காப்பாற்றச் சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்ற வேண்டும்!” என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தற்போது எடுக்கப்பட்டு வரும் Census2027 கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தோரைக் கணக்கிட ‘openended format to record caste details without a pre determined dropdown list or standardized menu’ முறையை ஒன்றிய அரசு பயன்படுத்தும் என்று வெளியாகியுள்ள அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது. ஓ.பி.சி. பட்டியலில் இடம்பெற்றுள்ளவை வகுப்புகள்தானே தவிர, அவை சாதிகள் அல்ல என்று ஒன்றிய அரசு தரப்பில் தரப்பட்டுள்ள விளக்கம் ஏற்புடையது அல்ல!

மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இடம்பெற்றுள்ள சாதிகளின் பட்டியலைப் பெற்று, தொகுத்து, பதிவேற்றி, அதில் இடம்பெற்றுள்ள சாதிகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்பை மக்களுக்கு வழங்கும் வழிமுறையே குழப்பங்களுக்கு இடம் தராது. மாறாக, பொதுமக்கள் கூறும் சாதியின் பெயரைப் பதிவேற்றுவது குழப்பங்களுக்கே வழிவகுக்கும்.

### 46 இலட்சம் சாதிகள் இருப்பதாகக் கணக்கு வரும்!

இதனால் இந்தியாவில் 46 இலட்சம் சாதிகள் இருப்பதாகக் குளறுபடியான கணக்கு வரும் என்ற ஆபத்தைச் சமூகநீதியில் அக்கறை கொண்ட பலரும் சுட்டிக்காட்டுவதை அரசு புறந்தள்ளிவிடக் கூடாது.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் நோக்கமே பட்டியலினச் சமூக மக்களின் எண்ணிக்கையைப் போல, OBC மக்களின் உண்மையான எண்ணிக்கையையும் அவர்களது கல்வி, சமுதாய, பொருளாதார நிலைமையையும் அறிந்துகொள்வதுதான். அப்போதுதான் அவர்கள் அதிகாரம் பெறுவதற்கான இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை வகுக்கவும், அவர்தம் முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களைத் தீட்டவும் அரசுகளால் இயலும். அப்படி இருக்கையில், ஒன்றிய, மாநில அரசுகளின் OBC சாதிகளின் பட்டியலை வைத்து, அதிலிருந்து மக்கள் சாதிப் பெயரைத் தேர்வு செய்யும் முறையைப் பின்பற்றினால் தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் நோக்கம் நிறைவேறும்.

### கண்துடைப்பு நடவடிக்கையாகிவிடும்!

தற்போதைய முறையைத் தொடர்ந்தால், மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்காகச் செலவிடப்படும் சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாயும், இலட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் உழைப்பும் வீணடிக்கப்படும். இதனால் எந்தப் பயனும் இல்லை. இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக அமைந்து விடும் ஆபத்தைப் புறந்தள்ளக் கூடாது.

பொருத்தமற்ற விளக்கங்களைக் கூறி, ஒரு தவறை நியாயப்படுத்தாமல், குளறுபடிகளுக்கு இடம் தராமல், சாதிவாரிக் கணக்கெடுப்பின் உண்மையான நோக்கம் நிறைவேறுவதற்கான திருத்த நடவடிக்கைகளை உடனடியாக ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

### சமூகநீதியை உறுதிசெய்து, நீதி வழங்க வேண்டும்!

கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூகநீதி உரிமையை உறுதிசெய்து, நீதி வழங்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

### சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சிறப்புத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்!


தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இதற்கான சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி, உரிய அழுத்தத்தை ஒன்றிய அரசுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## நாமக்கல் கவிஞர் மாளிகை - முதல்வர் அலுவலகம் மாற்றம்! நிதி ஒதுக்கீட்டில் குளறுபடி!

சென்னை, செப்.8–

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையின் பிரதான கட்டடத்தில் செயல்பட்டு வரும் முதலமைச்சர் அலுவலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்திற்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. முதலமைச்சரின் புதிய அலுவலகத்திற்காக முறைப்படி இணையத்தில் டெண்டர் அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்பாகவே, நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் இருந்த பழைய கூட்ட அரங்கை இடித்து, கட்டுமானப் பணிகளைத் தொடங்கிவிட்டதாக தி.மு.க., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. டெண்டர்



இறுதி செய்யப்படுவதற்கு முன்பே பணிகள் எதன் அடிப்படையில் தொடங்கப்பட்டன என்றும், குறிப்பிட்ட ஒரு ஒப்பந்ததாரருக்குச் சாதகமாக இந்த நடைமுறைகள் நடத்தப்பட்டதா என்றும் சட்டமன்றத்தில் காரசாரமான விவாதங்கள் எழுந்தன.

இந்நிலையில், முதலமைச்சரின் புதிய அலுவலகத்திற்கு முதற்கட்டமாக 5 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டெண்டர் கோரப்பட்டு பணிகள் தொடங்கப்பட்ட நிலையில், தற்போது தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள தமிழக அரசு, இத்திட்டத்திற்கு 6 கோடியே 17 லட்சம் ரூபாய் ஒதுகீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. அரசின் கஜானா காலி என அரசு கூறி வரும் நிலையில், முதலமைச்சரின் அலுவலகத்திற்காக கோடிக் கணக்கான ரூபாய் செலவிடப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

### குற்றவாளிகள் தஞ்சம் அடையும் குப்பைத் தொட்டி த.வெ.க.!

# தலைநகரிலேயே சீரழியும் சட்டம் - ஒழுங்கு!

## த.வெ.க. பிரமுகர் படுகொலை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்!

**சென்னை, செப்.8-**

**சென்னையில் த.வெ.க. பிரமுகர் படுகொலை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் “குற்றவாளிகள் தஞ்சம் அடையும் குப்பைத் தொட்டி த.வெ.க.” என்றும் “தலைநகரிலேயே சீரழியும் சட்டம் ஒழுங்கு” என்றும் விமர்சனம் செய்துள்ளார்.**



சென்னை அடையாறு வண்ணாந்துறை பகுதியைச் சேர்ந்தவர் 45 வயதான கண்ணன். த.வெ.க. நிர்வாகியான இவர், 6.9.2026 அன்று இரவு மர்ம நபர்களால் ஓட ஓட விரட்டி படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து அங்கிருந்த சி.சி.டி.வி. கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து மூன்று தனிப்படைகள் அமைத்து குற்றவாளிகளை தேடி வந்தனர்.

அதன்படி, இந்த கொலை சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 5 பேரை போலீசார் துப்பாக்கி முனையில் கைது செய்துள்ளனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கடந்த 2009ஆம் ஆண்டு சிவா என்பவரை கண்ணன் தலைமையிலான கும்பல் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. இந்த முன் விரோதம் காரணமாக சிவா குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் கண்ணனை கொலை செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் குறித்து போலீசார் அவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து தனது சமூக வலைதள எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது:-

**“நாளை முதலமைச்சர் காவல்துறை மானியக் கோரிக்கை விவாதம் மீது பதிலுரை அளிப்பதற்கு முன்பாக அவரது கட்சிப் பிரமுகர் ஒருவரே தலைநகரில் கொலைக்கு ஆளாகியுள்ளார். அதுவும், தனது உயிருக்குப் பாதுகாப்பு வேண்டி ஆளும் த.வெ.க. வில் இணைந்த சரித்திரப் பதிவேடு குற்றவாளி சாலையில் ஓட ஓட விரட்டிக் கொல்லப்பட்டுள்ளார். இதுதான் தமிழ்நாட்டின் ‘வெற்றி சட்டம் ஒழுங்கு’ நிலை!**

**தலைநகரிலேயே சாலையில், இப்படி ஒரு கொலை நடக்கும் அளவு சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுப் போயிருப்பதை நினைத்து வருந்துவதா? இல்லை, சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் எல்லாம் தஞ்சமாகும் குப்பைத் தொட்டியாகத் த.வெ.க. இருப்பதை நினைத்து வருந்துவதா? இதற்கும் தி.மு.க.வை எப்படி குற்றம் சொல்லலாம் என யோசிப்பதை நிறுத்திவிட்டு, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.**

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### நடப்பு கொள்முதல் பருவத்திற்கு அரசாணை வெளியிடாததால்

# நெல் கொள்முதல் நிறுத்தம் - டெல்டா விவசாயிகள் வேதனை!

தஞ்சாவூர், செப்.8-

தமிழகத்தில் விளைவிக்கப்படும் நெல்லை. இந்திய உணவுக் கழகத்துக்கு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் முகவராக இருந்து விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்து தருகிறது. கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை, இந்திய உணவுக் கழகத்தின் வழிகாட்டுதல் படி, பொது விநியோகத் திட்டத்துக்கு இந்தியா முழுவதும் அனுப்பப்பட்டு வருகிறது. இதற்காக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்துக்கு இந்திய உணவுக் கழகம் வாயிலாக ஒன்றிய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

இந்திய உணவுக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் நெல் கொள்முதல் செய்ய கொள்முதல் பருவ காலத்தை அக்டோபர் 1ஆம் தேதி முதல் செப்.30-ஆம் தேதி வரை நிர்ணயித்துள்ளது. கடந்த 2022ஆம் ஆண்டு குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணை வழக்கமான ஜூன் 12ம் தேதிக்கு முன்பாக மே 24ஆம் தேதி திறக்கப்பட்டது. அப்போது குறுவை சாகுபடியும் முன்கூட்டியே தொடங்கி. அறுவடைக்கு வந்ததால், விவசாயிகளின் கோரிக்கையின்படி தமிழக அரசு கொள்முதல் பருவத்தை அக்டோபர் 1ஆம் தேதிக்கு பதிலாக செப்டம்பர் 1ஆம் தேதியே திறக்க ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி அனுமதி பெற்றது. இதைத் தொடர்ந்து கடந்த 2022 முதல் ஒவ்வொரு ஆண்டும். குறுவை கொள்முதல் செய்ய தமிழக அரசு அரசாணையை வெளியிட்டு, புதிய விலையில் கொள்முதல் செய்து வருகிறது. இந்தாண்டும் பம்புசெட் மூலம் குறுவை சாகுபடி செய்யப்பட்டு. டெல்டா மாவட்டங்களில்

அறுவடை தொடங்கியுள்ளது. அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையங்களில் கொண்டு சென்றுள்ளனர். ஆனால் செப்.4ஆம் தேதி ஆகியும் இதுவரை, புதிய கொள்முதல் பருவத்தில், புதிய விலையில் நெல் கொள்முதல் செய்ய அரசாணை வரவில்லை எனக் கூறி கொள்முதல் செய்யாமல் உள்ளனர். அதே நேரத்தில், ஒருசில இடங்களில் கொள்முதல் பணியை செய்தாலும், அதற்கான ரசீது மற்றும் பணம் பட்டுவாடா வழங்காமல் உள்ளனர்.

இதுகுறித்து தமிழக நலிவுற்ற விவசாய சங்க மாநில தலைவர் முகமது இப்ராகிம் கூறியதாவது:-

கடந்தாண்டு பொது ரகத்துக்கு குவிண்டாலுக்கு ரூ.2,500 விலை வழங்கப்பட்ட நிலையில், இந்தாண்டு ரூ. 2,600-ம், சன்ன ரகத்துக்கு கடந்தாண்டு ரூ.2,545 வழங்கப்பட்ட நிலையில் இந்தாண்டு ரூ 2,750-ம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. . ஆனால் புதிய விலையை உடனடியாக அமல் படுத்த அரசாணையை வெளியிட வேண்டும். இல்லை என்றால் கொள்முதல் பருவ காலத்தை தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் கூறும்போது, நெல் கொள்முதல் செய்ய நிகழாண்டுக்கான அரசாணை இதுவரை வரவில்லை, வந்தவுடன் புதிய விலையில் கொள்முதல் செய்யப்படும் என்றனர்.